இனிமையான குழந்தைகளே ! இது அனாதி விளையாட்டு (நாடகம்) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு பாகதாரியின் பாகமும் தனித் தனியானது. ஒருவருடைய பாகம் மற்றவரைப் போல இருக்க முடியாது. இதுவும் இயற்கை ஆகும்.

கேள்வி: பக்தி மார்க்கத்தில் கங்கா ஜலத்திற்கு இவ்வளவு மதிப்பு ஏன் கொடுக்கிறார்கள்? பக்தர் களுக்கு கங்கா ஜலத்தின் மீது இவ்வளவு அன்பு ஏன்?

பதில்: ஏனெனில் குழந்தைகளாகிய நீங்கள் இப்பொழுது ஞான ஜலத்தினால் (அமிருதம்) சத்கதியை அடைகிறீர்கள். உங்களது அன்பு ஞானத்தின் மீது உள்ளது. அதன் மூலம் நீங்கள் ஞான கங்கை ஆகி விடுகிறீர்கள். எனவே பக்தர்கள் பிறகு தண்ணீருக்கு இவ்வளவு மதிப்பு அளித்துள்ளார்கள். வைஷ்ணவர்கள் எப்பொழுதும் கங்கா ஜலத்தையே பயன்படுத்துகிறார்கள். ஆனால் தண்ணீரினால் எந்தவொரு சத்கதியும் ஆவதில்லை. சத்கதியோ ஞானத்தினால் ஆகிறது. ஞானக்கடலான தந்தை உங்களுக்கு படைப்பினுடைய முதல் இடை கடை பற்றிய ஞானத்தை அளிக்கிறார். ஆத்மாவைத் தூய்மையாக ஆக்குவதற் கான சாதனம் தண்ணீர் அல்ல. அதற்கு ஞானம் மற்றும் யோகத்தின் இஞ்ஜெக்ஷன் வேண்டும். அது ஒரு தந்தையிடம் தான் உள்ளது.

பாடல்: அதிர்ஷ்டத்தை எழுப்பி வந்துள்ளேன் .. .. .. ..

ஓம் சாந்தி. இது ஞான மார்க்கமாகும், இதனால் சத்கதி ஆகிறது அல்லது சொர்க்கத்தின் இராஜ்ய பாக்கியம் கிடைக்கிறது என்பதை இனிமையிலும் இனிமையான குழந்தைகள் அறிந்துள்ளீர்கள். எனவே இதை பாடசாலை என்று கூறினாலும் சரி, கல்லூரி என்று கூறினாலும் சரி, பல்கலைக் கழகம் என்று கூறினாலும் சரி, விஷயம் ஒன்று தான். யுனிவர் சிட்டியில் பெரிய கல்வி அதில் சிறிய கல்வி கிடைக்கிறது. இருப்பதோ எல்லாமே பாடசாலை களாக. பாடசாலையில் சம்பாத் தியத்திற்காக படிக்கிறார்கள். இது நம்முடைய மறைமுகமான படிப்பு ஆகும் என்பதை குழந்தை களாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள். எல்லையில்லாத தந்தை வந்து ஆத்மாக்களுக்குக் கற்பிக்கிறார். ஆத்மாக்கள் தான் கற்கிறார்கள். ஒரு வேளை கிருஷ்ணர் பகவானாக இருந்திருந் தால் உங்களது புத்தியோகம் அவரது படத்தின் மீது சென்றிருக்கும். அவர் பக்கம் கவர்ச்சி இருந்திருக்கும். அவருடைய படங்கள் இல்லாமல் நீங்கள் இருக்க முடியாது. ஆனால் கிருஷ்ணரோ பகவான் அல்ல. எனவே தவறாக நினைத்த காரணத்தால் மனிதர்களுக்கு கிருஷ்ணருடைய நினைவு தான் இருக்கும். உடலினுடைய நினைவோ மிகவும் சுலபம். ஆன்மீக நினைவில் உழைப்பு உள்ளது. பாபா எப்படி நினைவு செய்வது? யாரை நினைவு செய்வது? என்று கேட்கிறார்கள். கிருஷ்ணருடைய படமோ இனிமையாக உள்ளது. பரமபிதா பரமாத்மாவோ நிராகாரமானவர் ஆவார். நான் இந்த வயோதிக சரீரத்தில் வந்து குழந்தைகளாகிய உங்களுக்கு மீண்டும் சகஜ இராஜயோகம் மற்றும் ஞானத்தைக் கற்பிக்கிறேன் என்று சுயம் அவரே கூறுகிறார். இருப்பதோ மிகவும் சுலபமானது. பாபாவை நினைவு மட்டும் செய்ய வேண்டும். சிவபாபாவை நினைவு செய்கிறார்கள் அல்லவா? பனாரஸில்

சிவகாசி என்று கூறுகிறார்கள். பிறகு விஷ்வநாத் கங்கா என்று கூறுகிறார்கள். விஷ்வநாதர் கங்கையை எடுத்து வந்தார். இப்பொழுது தண்ணீரின் கங்கையின் விஷயமோ கிடையாது. ஞானக் கடல் இந்த ஞான கங்கைகளை எடுத்து வந்துள்ளார். எனவே ஞான கங்கைகளுக்கு அவசியம் ஞானம் கொடுக்கக் கூடிய ஞானக் கடலான தந்தையின் நினைவு இருக்க வேண்டும். ஹே ஞான கங்கைகளே! ஒரு வேளை நீங்கள் தங்களை ஞான கங்கை என்று நினைக்கிறீர்கள் என்றால் ஞானக் கடலை நினைவு செய்யுங்கள். யார் தங்களை ஞானகங்கை என்று நினைப்பதில்லையோ அவர்கள் அஞ்ஞானி ஆவார்கள். நமக்கு ஞானக் கடல் இந்த படைப்பினுடைய முதல் இடை கடையின் ஞானத்தைக் கொடுத்துள்ளார் என்பதை குழந்தை களாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள். இப்பொழுது நாம், பிறகு அனைவருக்கும் சென்று ஞான அமிர்தத்தை கொடுக்க வேண்டும். பிறகு ஒரு சிலர் ஒரு கை அளவு எடுக் கிறார்கள். ஒரு சிலர் டம்ளர் நிரப்புகிறார்கள். வைஷ்ணவர்களுக்கு கங்கா ஜலத்தின் மீது அன்பு இருக்கும். அவர்கள் எப்பொழுதும் கங்கா ஜலத்தை பயன்படுத்துகிறார்கள். உங்களுக்கு இந்த ஞானத்தின் மீது அன்பு உள்ளது. ஏனெனில் இந்த ஞானத்தினால் நீங்கள் சத்கதியை அடைகிறீர்கள். ஆத்மாவாகிய நீங்கள் தந்தையாகிய என்னை நினைவு செய்யுங்கள் என்று சிவபாபா இந்த ஞானத்தை கொடுத்துள்ளார். ஆஸ்தி பற்றி கூட நீங்கள் அறிந்து விட்டுள்ளீர்கள். இது யார் புரிய வைக்கிறார்? பரமபிதா பரமாத்மா. பரமாத்மா விடமிருந்து ஆஸ்தி எப்படி கிடைக்கிறது என்ற சிந்தனை ஒரு பொழுதும் கனவிலும் கூட யாருக்கும் வராது. பரமபிதா பரமாத்மா இன்றி இந்த எல்லையில்லாத ஆஸ்தி கிடைக்க முடியாது. பரமபிதா என்றால் அனைத்து மனிதர்களின் படைப்புகர்த்தா. எனவே படைப்பினுடைய தந்தை ஆகிறார் அல்லவா? நிராகாரமானவருக்கு மட்டுமே பரமபிதா பரம ஆத்மா என்று கூறப்படுகிறது. அவரை இந்தக் கண்களால் பார்க்க முடியாது. பக்தி மார்க்கத்தில் திவ்ய திருஷ்டி மூலமாக பார்க்கப்படுகிறது. இங்கு கூட நீங்கள் ஆத்மாவின் சாட்சாத்காரம் (காட்சி தெரிதல்) செய்யவில்லை. இருந்தாலும் தன்னை ஆத்மா என்று நிச்சயம் செய்கிறீர்கள். ஆத்மா அவினாஷி (அழியாதது) என்பதை அறிந்துள்ளீர்கள். ஆத்மா வெளியேறி விட்டால் சரீரம் எதற்கும் பயனில்லாததாக இருக்கும். ஆத்மா ஒரு சரீரம் விட்டு மற்றொன்றை எடுக்கிறது என்பதையோ அனைவரும் அறிந்துள்ளார்கள். ஆனால் ஆத்மா என்பது என்ன பொருள் - இது யாருக்குமே தெரியாது. ஆத்மா பிந்துவைப் போல மிகவுமே சூட்சுமத்திலும் சூட்சுமமானது ஆகும். அது புருவ மத்தியில் வசிக்கிறது. முற்றிலுமே சிறிய ஆத்மா ஆகும். அது தான் எல்லாமே செய்கிறது. ஆத்மா இல்லை யென்றால், இந்த கர்மஇந்திரியங்கள் கூட இயங்க முடியாது. ஆத்மா ஒரு சரீரத்தை விட்டு மற்றொன்றை எடுத்து தனது பாகத்தை நடிக்கிறது. ஒவ்வொருவருடைய பாகமும் தனித் தனி ஆகும். ஒருவர் போல மற்றவரது இருக்காது. நடிகர்கள் ஒரு பொழுதும் ஒன்று போல இருப்பதில்லை. இந்த நாடகத்தை யாருமே புரிந்து கொள்ள முடியாமல் இருக் கிறார்கள். ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அவரவருடைய பாகம் உள்ளது. ஆத்மாக்கள் அனைத்துமே ஒரே ரூபத்தினுடையதாக இருக்கின்றன. மற்றபடி சரீரங்கள் வெவ்வேறாக இருக்கும். இது அனாதி நாடகம் ஏற்கனவே! அமைக்கப்பட்டுள்ளது. இந்த விஷயங்களை விசால புத்தியினால் தான் புரிந்து கொள்ள முடியும். பிந்து போன்ற ஆத்மாவில் 84 பிறவிகளின் பாகத்தை அழியாததாக பொருந்தி உள்ளது என்பதை நினைத்து ஆச்சரியப்பட வேண்டும். அது ஒரு பொழுதும் அழிந்து

போவ தில்லை. இதற்கு இயற்கை என்று கூறப் படுகிறது. நான் ஒரு சரீரத்தை விட்டு விட்டு இன்னொரு பாகத்தை ஏற்று நடிக்கிறேன் என்று ஆத்மா சுயம் கூறுகிறார். நாம் சாட்சியாக (பார்வையாளர்) ஆகி, முழு சிருஷ்டியின் பார்ட்தாரிகளின் செயலைப் பார்க்கிறோம். நாம் பரமபிதா பரமாத்மாவிட மிருந்து தங்களது 21 பிறவிகளுக்கான சுகத்தின் ஆஸ்தியை மீண்டும் பெற்று கொண்டிருக்கிறோம். இதற்காக 2500 வருடங்கள் (அரைகல்பம்) பக்தி செய்துள்ளீர்கள். எனவே அவசியம் பக்தர்களுக்கு பகவான் கிடைக்கவே வேண்டி உள்ளது. நம்பர் ஒன் பக்தன், பூஜாரி நீங்கள் ஆவீர்கள் என்பது இப்பொழுது உங்களுக்கு தெரிய வந்துள்ளது. இந்த நாடகத்தில் முதன் முதலில் சத்யுகத்தில் நீங்கள் தேவி தேவதைகளின் பாகம் நடிக்க வருகிறீர்கள். இச்சமயம் நீங்கள் பிராமண வர்ணத்தில் இருக்கிறீர்கள். ஆத்மாக்களாகிய நாம் பிரம்மா முகவம்சாவளி பிராமண தர்மத்தினுடையவர்கள் ஆவோம். நாம் பிராமண தர்மத்திலிருந்து தேவதா தர்மத்திற்குச் செல்ல வேண்டும் என்பதற்காக இப்பொழுது படிக்கிறோம். ஆத்மாவிற்கு ஞானம் கிடைத்துள்ளது. ஞானத்தினால் சத்கதி ஆகிறது. சத்கதி கிடைக்க வேண்டி வரும் பொழுது எல்லோருக்கும் கிடைக்கிறது. நான் தான் அனைவருக்கும் சத்கதி அளிக்கும் வள்ளல், என்று தந்தை கூறுகிறார். மனிதர்கள் ஒரு பொழுதும் குரு ஆவதில்லை. எப்பொழுதுமே (தேஹீ அபிமானி) ஆத்ம உணர்வுடையவராக இருக்க வேண்டும். உதாரணமாக ஒருவருக்கு ஒரு குழந்தை இருக்கிறது என்று வைத்து கொள்வோம் இது கர்மங்களின் கணக்கு வழக்கினால் குழந்தை ஆனார் என்று புரிந்து கொள்ள வேண்டும். இறந்து விட்டது என்றால், அவ்வளவு தான். ஒரு சரீரத்தை விட்டு, மற்றொன்றை எடுத்து விட்டார். கணக்கு வழக்கு அவ்வளவு தான் இருந்தது, முடித்து விட்டார். இதில் துக்கப்படு வதற்கான அல்லது அழ வேண்டிய விஷயமே கிடையாது. சாட்சியாகி (பார்வையாளர்) விளை யாட்டைப் பார்க்க வேண்டும்.

நாம் 84 பிறவிகள் எடுக்கிறோம் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள். சத்யுகத்தில் நாம் தேவி தேவதைகளாக இருந்தோம். முதலில் நீங்கள் ஒன்றும் அறியாமல் இருந்தீர்கள். பிரம்மா கூட நிறைய குருக்களை ஏற்றிருந்தார். ஆனால் இவருக்கு கூட எதுவும் தெரியாமல் இருந்தது. 84 இலட்சம் பிறவிகள் உள்ளன என்று நினைத்து கொண்டி ருந்தார். இப்பொழுது நீங்கள் இது போல கூறமாட்டீர்கள். இனிமையிலும் இனிமையான அருமையான குழந்தைகளே! நான் தான் வந்து அனைவருக்கும் சத்கதி அளிக்கிறேன் என்று தந்தை கூறுகிறார். அனைத்து தர்மங் களைச் சேர்ந்த பக்தர்களும் பகவானை ஏதாவதொரு விதத்தில் அவசியம் நினைவு செய்கிறார்கள். ஹே காட்ஃபாதர், ஹே பரமபிதா பரமாத்மா! என்று கூறுகிறார்கள். ஆனால் பரமாத்மாவை அறியாமல் உள்ளார்கள். பரமபிதா பரமாத்மா பரந்தாமத்தில் இருக்கிறார் என்று மட்டும் புரிந்துள்ளார்கள். ஆனால் நாம் அங்கு எப்படி போகலாம். நாமோ போக முடியாது. சத்யுக தேவதை கள் கூட போக முடியாது. அவர்கள் 84 பிறவிகள் எடுக்க வேண்டி உள்ளது. அங்கு சுகம் இருக்கும். அங்கு எங்கு செல்ல வேண்டி உள்ளது என்ற சிந்தனை கூட இருக்காது. தந்தையையும் நினைவு செய்வதில்லை. துக்கத்தில் எல்லோரும் நினைவு செய்வார்கள் என்று கூறுகிறார்கள். நான் உங்களை சொர்க்கத்திற்கு அதிபதியாக ஆக்குகிறேன் என்று தந்தை புரிய வைக்கிறார். அங்கு நீங்கள் சதா சுகமுடையவர்களாக இருப்பீர்கள். கல்பத்திற்கு இலட்சக்கணக்கான

வருடங்களின் ஆயுள் கொடுத்து விட்டுள்ளார்கள். இது தவறாகும். பக்தியில் குழப்பங்கள் நிறைய உள்ளன. கோயில் குளம் என அலைந்து கஷ்டப்படுவது, ஜபம் தவம் தீர்த்தம் ஆகியவை செய்வது எல்லாமே பக்தி மார்க்கமாகும். அரைகல்பம் பக்தி மார்க்கம் நடக்கிறது. இதுவும் நாடகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. எல்லா குழந்தைகளும் நாடகத்திற்கு வசப்பட்டுள்ளார்கள் என்று தந்தை கூறுகிறார். நான் கூட படைப்பவர், இயக்குநர், செய்பவர் மற்றும் செய்விப்பவராக இருக்கிறேன் என்றாலும் கூட நானும் நாடகத்திற்கு வசப் பட்டுள்ளேன். குறிப்பிட்ட ஒரு காலத்தில் ஒரு உடலைத் தவிர வேறு எந்த உடலிலும் வர முடியாது. எப்பொழுதுமே தாதாவின் உடலில் தான் வருவாரா? மேலும் இவரைத் தான் பிரம்மாவாக ஆக்குவாரா என்ன! என்று கூறுகிறார்கள். ஆம். முதன் முதலில் இவர் களுடைய ஜன்மம் தான் இலட்சுமி நாராயணராக இருந்தது அல்லவா? பிறகு இவர்களைத் தான் ஆதி தேவன் ஆதி தேவியாக ஆக்குவார். இந்த தில்வாலா கோவியில் சிவனினுடைய படமும் இருக்கிறது. ஆதி தேவன் ஆதி தேவியும் இருக்கிறார்கள். குழந்தைகளும் இருக் கிறார்கள். எல்லோரும் தவத்தில் அமர்ந்திருக்கிறார்கள். மேலே சொர்க்கம் கூட உள்ளது. முழுமையான நினைவார்த்தம் நின்றுள்ளது. நீங்கள் இங்கு அமர்ந்தபடியே தேவதா விருட்சத் தின் ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறீர்கள். அது ஜட சித்திரங்கள் ஆகும். இங்கு நீங்கள் உயிரூட்ட மாக அமர்ந்துள்ளீர்கள். நீங்கள் ஸ்ரீமத் படி சொர்க்கத்தின் ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறீர்கள். யார் நல்ல முறையில் கற்று பிறருக்கும் கற்பிக்கிறார்களோ அவர்கள் உயர்ந்த பதவியை அடைகிறார்கள். இலட்சுமி நாராயணர் என்ன புருஷார்த்தம் (முயற்சி) செய்திருக்க கூடும். நீங்கள் கூட மீண்டும் தேவதை ஆக வேண்டும் என்பதற்காக புருஷார்த்தம் செய்து கொண்டிருக்கிறீர்கள். எனவே அவசியம் தேவதைகள் முந்தைய பிறவியில் புருஷார்த்தம் செய்திருக்க கூடும். மனிதர்கள் மரண உலகத்தில் இருக்கிறார்கள். தேவதைகள் அமரலோகத்தில் இருக்கிறார்கள். பாரதம் அமரலோகமாக இருந்தது. பிறகு மரண உலகமாக ஆகி உள்ளது. இப்பொழுது இருப்பது சங்கமம். இதற்கு கும்பமேளா என்று கூறப்படுகிறது. இது கும்பத்தினுடைய உண்மையிலும் உண்மையான மேளா. ஆத்மா பரமாத்மா சந்திக்கிறார்கள். அநேக முறை சந்தித்திருக்கக் கூடும். அநேக முறை சந்திக்கப் போகிறார்கள். ஒரு சிலரோ புருஷார்த்தம் செய்து முழுமையான ஆஸ்தி எடுப்பார்கள். ஒரு சிலரோ பின் போய் விடுவார்கள் (விட்டில் பூச்சிகளின் உதாரணம்). வருவதோ நிறைய பேர் வருகிறார்கள். இவர் நமது பாப்தாதா ஆவார் என்ற நிச்சயம் குழந்தைகளாகிய உங்களுக்கு உள்ளது. நாம் பிரம்மாகுமார் குமாரிகள் ஆவோம். பிரம்மா கூட சிவனின் குழந்தை ஆவார். நாம் தத்து எடுக்கப்பட்ட குழந்தைகள் ஆவோம். தந்தையின் குழந்தை கள் என்றோ அனைவரும் கூறிக் கொள்கிறார்கள். ஆனால் நாங்கள் பி.கே. என்று அழைத்துக் கொள்கிறோம் என்றால், நாங்கள் சிவவம்சத்தினர் பிரம்மா குமார் குமாரிகள் ஆகி விட்டோம். சிவபாபா தாதா (பாட்டனார்) ஆவார். அவருடைய முக்கிய பாலகன் ஒருவர் ஆவார். ஒருவரிடமிருந்து பின் இன்னொருவர் பிறக்கிறார். பிரம்மா முகவம்சாவளி யான நாம் ஏராளமாக உள்ளோம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். ஏராளமானோர் ஆகிக் கொண்டே போவார்கள். கற்பிப்பவர் சிவபாபா ஆவார். பிரம்மாவுடைய ஆத்மா கூட என்னை நினைவு செய்கிறார். நீங்கள் கூட நினைவு செய்ய வேண்டும். சிருஷ்டி சக்கரத்தை நினைவு செய்தீர்கள் என்றால் சக்கரவர்த்தி ராஜா ஆகிடுவீர்கள். இப்பொழுது நீங்கள்

சுயதரிசன சக்கரதாரி ஆகிறீர்கள். உங்களிலும் கூட வரிசைக்கிரமமாக இதை நினைவு செய்கிறார்கள். நினைத்து நினைத்து ஜீவன் முக்தி பெறுங்கள் என்று பாடப் படுகிறது அல்லவா? அங்கு துக்கம் இருக்காது. இதுவோ பழைய உலகம் ஆகும். இந்த சரீரம்கூட பழைய செருப்பு ஆகும். அடிக்கடி ஒட்டுப் போட வேண்டி உள்ளது. பாம்பின் உதாரணம் கொடுக்கிறார்கள் அல்லவா? அது பழைய சட்டையை விடுத்து புதியதை எடுத்துக் கொண்டு விடுகிறது. புதிய சட்டை பிரகாசமாக இருக்கும். எனவே இந்த உங்களுடைய 84 பிறவிகளின் பழைய சட்டை முற்றிலுமே பட்டுப் போன நிலையில் தமோபிரதானமாக உள்ளது. இப்பொழுது உங்களது ஆத்மா மற்றும் சரீரம் எப்படி சதோபிர தானமாக ஆகலாம் என்பதை தந்தை வந்து புரிய வைக்கிறார். இனிமையிலும் இனிமையான குழந்தைகளே! என் ஒருவனை நினைவு செய்யுங்கள். இந்த நினைவு என்ற அக்கினி மூலம் உங்களில் படிந்திருக்கும் துரு எரிந்து சாம்பலாக ஆகி விடும். உங்களது ஆத்மா சதோபிரதானமாக ஆகி விடும். பிறகு இந்த பழைய சரீரத்தை விடுத்து ஆத்மா போய் புதிய சரீரத்தை எடுக்கும். தந்தையின் நினைவினால் தான் விகர்மங்கள் விநாசம் ஆகும். பக்தி மார்க்கத்தில் கூட நினைவு செய்கிறார்கள் அல்லவா? நாமத்தை ஜபிக்கிறார்கள். பூஜை செய்கிறார்கள். அவர்களுக்கு நீராட்டுதல் ஆகியவை செய்விக்கிறார்கள். இங்கோ சிவபாபாவிற்கு ஸ்நானம் ஆகியவை செய்விக்க வேண்டியது இல்லை. அவரோ அசரீரி ஆவார். சிவனுடைய கோவிலில் ஒரு பொழுதும் சிவனுக்கு ஆடை ஆகியவை அணிவித்து அலங்கரிக்கிறார்களா என்ன? கிருஷ்ணரை இலட்சுமி நாராயணர் ஆகியோரையோ எவ்வளவு அலங்கரிக்கிறார்கள்? நிராகாரமானவருக்கு என்ன அலங்காரம் செய்வார்கள்? எனவே நீங்கள் நிராகார சிவனாகிய எனக்கு ஏன் பூஜை செய்து கொண்டிருந்தீர்கள் என்று தந்தை கூறுகிறார். அவசியம் ஏதோ நான் செய்து விட்டு சென்றுள்ளேன். அதனால் தானே நீங்கள் பூஜை ஆகியவை செய்கிறீர்கள். ஆத்மாக்களாகிய நீங்கள் நிராகாரமானவர்கள் ஆவீர்கள். நான் கூட நிராகாரமானவன் ஆவேன். நீங்கள் மறுபிறவி எடுக்கிறீர்கள். நான் புனர்ஜென்மம் எடுப்பது இல்லை. நான் வந்து உங்களுக்கு சொர்க்கத்தின் 21 பிறவி களுக்கான ஆஸ்தியைக் கொடுக்கிறேன். சந்நியாசிகள் ஆகியோரோ வீடு வாசலைத் துறந்து விட்டுப் போகிறார்கள். நீங்களோ எதையும் விட வேண்டியது இல்லை. இந்த கடைசி பிறவியில் மட்டும் தூய்மையாக ஆகி தந்தையை நினைவு செய்யுங்கள். அவ்வளவே! நினை வினால் தான் உங்களது ஆத்மா தங்கமாக ஆகி விடும். ஆத்மாவை இரும்பிலிருந்து தங்கமாக பாரஸ்நாதன் ஆக்கி விடுகிறார்.

நீங்கள் தான் உண்மையிலும் உண்மையான சம்பாத்தியம் செய்கிறீர்கள். அந்த பொய்யான சம்பாத்தியம் கூட தாராளமாக செய்து கொண்டே இருங்கள். கூடவே இதையும் செய்யுங்கள். எந்தவொரு பாவச் செயலையும் செய்யக் கூடாது. சர்ஜனோ ஒருவர் ஆவார். ஒவ்வொருவரது கர்மங்களின் கணக்கினுடைய நோய் தனித் தனி ஆகும். தந்தையிடம் யாராவது கேட்டார்கள் என்றால், இப்படி இப்படி செய்யுங்கள் என்று உடனே கூறி விடுவார். ஒரு தந்தை தான் கர்மாதீத நிலையில் அழைத்துச் செல்பவர் ஆவார். இது அவினாஷி சர்ஜனின் வழி ஆகும். ஒவ்வொரு வருக்கும் என்னென்ன பந்தனங்கள் உள்ளனவோ அது பற்றி வந்து கேளுங்கள். பெண் குழந்தை களோ கணவருக்கு பூம் பூம் என்று ஊதி கூட கூட்டி வருகிறார்கள். தூய்மை ஆகாமலோ சொர்க்கத்திற்குச் செல்ல முடியாது என்று அவருக்கு புரிய வைக்கிறார்கள்.

எல்லோரும் சாகவோ வேண்டும் தான். இதுவும் புரிந்து கொள்ள வேண்டிய விஷயமாகும். மரண உலகத்திற்கு இது கடைசி ஆகும். இது சங்கமம் ஆகும். அமரலோகத்தின் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக் கிறது. இப்பொழுது நாம் தந்தையினுடையவராக ஆகி, அதாவது பிராமணர் ஆகி, பிறகு தேவதை ஆகிடுவோம். பின்னர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் ஆகிடுவோம். இந்த மந்திரம் எவ்வளவு நன்றாக உள்ளது. பிறகும் நீங்கள் மறந்து விடுவீர்கள். யோகத்தில் இருக்கவில்லை என்றால் 63 பிறவிகளின் பாவங்களின் சுமை எப்படி சாம்பலாகும். கங்கையின் தண்ணீரி னால் பாவங்கள் கழுவப்படுமா என்ன? பாவங்கள் ஆத்மா மீது படிந்துள்ளது. பாவ ஆத்மா, புண்ணிய ஆத்மா என்று கூறுகிறார்கள் அல்லவா? எனவே ஆத்மாக்களாகிய நீங்கள் பாவனம் ஆவதற்கான இஞ்ஜெக்ஷன் வேண்டும். அந்த இஞ்ஜெக்ஷன் பதீத பாவன தந்தையிடம் தான் உள்ளது. வேறு யாரிடமும இந்த இஞ்ஜெக்ஷன் கிடையாது. எனவே எல்லோருமே ஹே பதீத பாவனரே வாருங்கள், வந்து தூய்மையற்றவர்களாகிய எங்களுக்கு ஞான இஞ்ஜெக்ஷன் கொடுங்கள். அப்பொழுது நாங்கள் பாவனம் ஆகிடுவோம் என்று அழைக்கிறார்கள். இப்பொழுது குழந்தைகள் யாத்திரையிலோ இருக்க வேண்டும் அல்லவா? எழுந்தாலும் அமர்ந்தாலும் எப்பொழுதும் யாத்திரையில் இருங்கள். தந்தை மற்றும் வீட்டினை நினைவு செய்தீர்கள் என்றால் சம்பாத்தியம் சேமிப்பு ஆகிக் கொண்டே இருக்கும். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. சாட்சி (பார்வையாளர்) ஆகி, ஒவ்வொரு பார்ட்தாரியினுடைய பாகத்தையும் பார்க்க வேண்டும். தந்தையிடமிருந்து 21 பிறவிகளுக்கான ஆஸ்தியைப் பெறுவதற்கான முழு முயற்சி செய்ய வேண்டும்.

2. ஆத்மாவை உண்மையான தங்கமாக ஆக்குவதற்காக இந்த கடைசி பிறவியில்தூய்மையாக ஆகி தந்தையை நினைவு செய்ய வேண்டும். உண்மையான சம்பாத்தியம் செய்ய வேண்டும்.

வரதானம் : வள்ளல் ஆகி தொடர்ச்சியாக (இடைவிடாமல்) பொக்கிஷங்களை தானம் செய்யக்கூடிய மகாதானி நிலையிலிருந்து விஷ்வ சேவாதாரி ஆகுக

பாபாவின் மூலம் என்னவெல்லாம் தொடர்ச்சியாக பொக்கிஷங்கள் கிடைத்திருக்கிறதோ, அதை கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்பதை எப்பொழுதும் நினைவில் வையுங்கள், பொக்கிஷங்களை செயலில் பயன்படுத்துங்கள். மனதின் மூலமோ, வார்த்தைகளின் மூலமோ, சம்மந்தம் - தொடர்பில் பயன்படுத்துக் கொண்டேயிருங்கள். வள்ளலின் குழந்தைகள் ஒரு நாள் கூட கொடுக்காமல் இருக்க முடியாது. விஷ்வ சேவாதாரிகள் ஒவ்வொரு நாளும் சேவை செய்து தான் ஆக வேண்டும். ஒருவேளை வார்த்தைகளினால் சேவை செய்வதற்கு வாய்ப்பு கிடைக்க வில்லையென்றால் மனதின் மூலம் செய்யுங்கள். மனதின் மூலம் செய்ய முடியவில்லை யென்றால்

தனது செயல் மற்றும் நடைமுறை வாழ்க்கையின் மூலம் செய்யுங்கள். எந்தளவு நீங்கள் மனதினால், தன்னை உதாரணமாக ஆக்கிவிட்டீர்கள் என்றால் உதாரணத்தை பார்த்து இயல்பாகவே அனைத்தும் ஈர்க்கப்படும்.

சுலோகன்: யாரிடம் திடத்தன்மையின் சக்தி இருக்கிறதோ, அவர்களுக்கு அசம்பவமானதும் ((முடியாததும்) கூட சம்பவமாக ((முடிந்து) ஆகிவிடும்.